நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் (வளர்ச்சி) நடவடிக்கைகள்,
பிறப்பிப்பவர் :- திருமதி. ஐ.ஹசினா பேகம்.,

ந.க.எண். ந3/12972/2020 நாள். 03.02.2021.

பொருள் :- பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் - நாமக்கல் மாவட்டம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - 2018 - 2019 மற்றும் 2019 - 2020 ஆம் ஆண்டு - இளநிலை உதவியாளர் காலிப் பணியிடங்கள் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பணி நாடுநர்கள் தெரிவு செய்யப்பட்டது - பணி நியமனம் அளிக்கப்பட்டது - பணியில் சேர்ந்து கொண்டது - இளநிலை உதவியாளர் நிலையில் பணி வரன்முறை செய்தல் மற்றும் தகுதிகாண்பருவம் துவக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

ஊராட்சி ஒன்றியம் 03 FEB 2021

படிக்க :-

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் எண். 2406 பிஎஸ்டி-1 2020, நாள்.29.05.2020 மற்றும் 14.09.2020.
2. நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். ந3 12972 2020, நாள்.04.08.2020 மற்றும் 29.09.2020.
3. தொடர்புடைய அலுவலகங்களிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகள்.

❖❖❖

ஆணை :-

மேலே ஒன்றில் படிக்கப்பட்டபடி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால், ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளின் தொகுதி நான்கில், தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளின் கீழ் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவியின் 2018 - 2019 மற்றும் 2019 - 2020ஆம் ஆண்டு காலிப்பணியிடங்களுக்கு நடத்தப்பட்ட போட்டித் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதின் பேரில், மேலே இரண்டில் படிக்கப்பட்டபடி நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்குட்பட்ட அலுவலகங்களில் தற்காலிக பணியமர்வு செய்யப்பட்ட கீழ்காணும் இளநிலை உதவியாளர் மற்றும் அதன் நிலை அலுவலர்களுக்கு, தனியர்கள், அவர்களுக்கெதிரே கலம் (3)இல் கண்டுள்ளவாறு பணியில் சேர்ந்த நாளினை அடிப்படையாகக் கொண்டு, கலம் (4)ல் கண்டுள்ள நாளில் பணியினை வரன்முறை செய்தும், அன்றைய நாள் முதல் தொடர்ச்சியான மூன்றாண்டுகளில் ஈராண்டு கால தகுதிகாண்பருவத்தினை துவக்கியும் இதன் வழி ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர், பதவி மற்றும் பணி புரியும் அலுவலகம். (திருவாளர்கள்.) | பணியில் சேர்ந்த நாள். | பணி வரன்முறை செய்து தகுதிகாண்பருவம் துவக்கப்படும் நாள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | கே. செல்வி,<br>இளநிலை உதவியாளர்,<br>ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகம், நாமக்கல். | 07.08.2020<br>முற்பகல். | 07.08.2020<br>முற்பகல். |

(திருப்புக)

Scanned with OKEN Scanner

| வ. எண். | பெயர், பதவி மற்றும் பணி புரியும் அலுவலகம். (திருவாளர்கள்.) | பணியில் சேர்ந்த நாள். | பணி வரன்முறை செய்து தகுதிகாண்பருவம் துவக்கப்படும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 2. | ட்டி. வனிதா,<br>இளநிலை உதவியாளர்,<br>(ஊராட்சி ஒன்றியப் பிரிவு),<br>ஊராட்சி ஒன்றியம், திருச்செங்கோடு. | 10.08.2020<br>முற்பகல் | 10.08.2020<br>முற்பகல் |
| 3. | வி. வனிதா,<br>இளநிலை உதவியாளர்,<br>(ஊராட்சி ஒன்றியப் பிரிவு),<br>ஊராட்சி ஒன்றியம், பரமத்தி | 08.08.2020<br>முற்பகல் | 08.08.2020<br>முற்பகல் |
| 4. | ஆர். பிரகாஷ்,<br>காசாளர்,<br>ஊராட்சி ஒன்றியம், இராசிபுரம். | 10.08.2020<br>முற்பகல் | 10.08.2020<br>முற்பகல் |
| 5. | எம். மீனா,<br>இளநிலை உதவியாளர் (வ.ஊ பிரிவு),<br>கபிலர்மலை வட்டாரம், | 10.08.2020<br>முற்பகல் | 10.08.2020<br>முற்பகல் |
| 6. | எஸ். நீலாவதி,<br>இளநிலை உதவியாளர் (வ.ஊ பிரிவு),<br>புதுச்சத்திரம் வட்டாரம். | 07.08.2020<br>முற்பகல் | 07.08.2020<br>முற்பகல் |
| 7. | ட்டி. சிந்துவி,<br>இளநிலை உதவியாளர் ,<br>(ஊராட்சி ஒன்றியப் பிரிவு),<br>ஊராட்சி ஒன்றியம், எருமப்பட்டி. | 10.08.2020<br>முற்பகல் | 10.08.2020<br>முற்பகல் |
| 8. | ப்பி. ராஜேஸ்வரி,<br>ஊர்நல அலுவலர் (நிலை-2)<br>(அலுவலக நிலை) (கி.ஊ பிரிவு),,<br>நாமகிரிப்பேட்டை வட்டாரம். | 10.08.2020<br>முற்பகல் | 10.08.2020<br>முற்பகல் |
| 9. | திரு. வி.யுவராஜ்,<br>ஊர்நல அலுவலர் (நிலை-2)<br>(களநிலை) (கி.ஊ பிரிவு),<br>கபிலர்மலை வட்டாரம். | 07.10.2020<br>முற்பகல் | 07.10.2020<br>முற்பகல் |

2. இவ்வாணையானது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 2018 - 2019 மற்றும் 2019 - 2020 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வின், தொகுதி நான்கில் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கான பணி நாடுநர்கள் தெரிவு தொடர்பாக மாண்பமை மெட்ராஸ் உயர் நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளையில் நிலுவையிலிருக்கும் வழக்குகளில் பிறப்பிக்கப்படும் தீர்ப்புகளுக்குட்பட்டது எனவும் ஆணையிடப்படுகிறது.

3. இவர்கள், தங்களது தகுதிகாண்பருவ காலத்திற்குள்ளாக அரசாணை (நிலை) எண்.33, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எம்) துறை, நாள். 02.03.2017இல் குறிப்பிடப்பட்டுள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கான பின்வரும் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(.....3)

Scanned with OKEN Scanner

| வ. எண். | தாள் குறியீடு எண். | தேர்வின் பெயர் |
|---|---|---|
| 1. | 008 | Department Test for the staff of Rural Development and Panchyat Raj Department – Tamilnadu Panchyat Act, 1994 & Rules and Constitution of India |
| 2. | 166 | The Panchyat Development Account Test. |
| 3. | 010 | Department Test for the staff of Rural Development and Panchyat Raj Department – Scheme Administration. |
| 4. | 172 | The Tamilnadu Government Office Mannual Test. |

4. இவ்வாணை குறித்த விவரத்தினை தொடர்புடைய அலுவலர்களின் பணிப்பதிவேடுகளில் பதிந்து, அதன் விவரத்தினை (பணிப்பதிவேடு தொகுதி மற்றும் பக்க எண் விவரங்களை உள்ளடக்கி) பணிப்பதிவேட்டின் பக்க நகலுடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைத்திட தொடர்புடைய அலுவலகத் தலைவர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),நாமக்கல்.

05.02.2024

பெறுநர் :- தொடர்புடைய அலுவலர்கள் (அலுவலகம் வழியாக).

நகல் :-

1. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை), நாமக்கல்.
2. ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், எருமப்பட்டி/ பரமத்தி/ இராசிபுரம்/ திருச்செங்கோடு
3. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ/ கி.ஊ), கபிலர்மலை, நாமகிரிப்பேட்டை மற்றும் புதுச்சத்திரம் வட்டாரங்கள்.
4. இவ்வலுவலக நி2 இருக்கை முக்கிய ஆணைத் தொகுப்பு.
5. முக்கிய ஆணைத் தொகுப்பு

Scanned with OKEN Scanner